மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை இரண்டிலும் ருசி இருக்கிறது. பதநீர்ச் சர்க்கரை சாப்பிடுவதால் "டையபிடீஸ்" போன்ற வியாதிகள் வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, கனம் உறுப்பினர் இதைப் பரீட்சித்துப் பார்க்குமாறு சிபாரிசு செய்கிறேன்.

திரு. ஆலடி அருணா : அவைத்தலைவர் அவர்களே, பதநீர் சர்க்கரையில் சுண்ணும்பு வாடை அதிகமாக இருப்பதால், அவை வாங்குகிறவர்களுக்கு அது கவர்ச்சியாக இருக்கவில்லை. ஆகவே, சுண்ணும்பு வாடை இல்லாத அளவிற்குச் செய்ய அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதிலே, நிபுணர்களைக் கொண்டு தான் இது செய்யப்படுகிறது. சுண்ணும்பு வாடை அதிகமாக இருப்பதாகப் புகார்கள் வரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால், அதைக் குறைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் நாங்குநேரி பகுதிகளில் ஏராளமாக பனை மரங்கள் இருப்பதால், பனஞ்சாறு உற்பத்தி செய்கிறார்கள். ஏற்கனவே குலசேகரப்பட்டணத்தில் பாரி அண்ட் கம்பெனியார் வைத்து இருந்ததைப் போல, ஒரு சர்க்கரை ஆலை நிறுவ முன்வருமா இந்த அரசாங்கம் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை ஆலையை அரசு சார்பாக நிறுவ உத்தேசம் இல்லை. அதற்காகத்தான், பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், பல இடங்களில் அப்படி அமைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான், மத்திய சர்க்காரிலிருந்து, இரண்டு அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் மத்திய சர்க்காருக்கு கருத்துக்களை அனுப்புவார்கள். முடிவு வந்த பிறகு, அவசியமான பகுதிகளில் ஏற்படுத்தத் தயங்க மாட்டோம்.

***282 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Government have proposed to issue licences for starting palm sugar factories in this State ?**

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

முற்பகல் 9-30 **திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இனியாவது அரசாங்கம் கூட்டுறவுத் துறையிலாவது இந்தத் தொழிற்சாலைகளை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள கேள்வியோடு தொடர்புள்ள கேள்வி இது. திரு. சித்தன் அவர்கள் ஏற்கெனவே கேட்டு நான் அதற்கு ஏற்கெனவே விளக்கங்களைக் கொடுத்திருக்கிறேன்.

Vigilance and Anti-corruption.

***266 Q.—THIRU K. M. RAMASWAMI GOUNDER AND THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state :**

(a) whether there is any proposal to reorganise the Directorate of Vigilance and Anti-corruption ; and

(b) if so, the details thereof ?